# BSNLEU & NFTE (BSNL)

## தமிழ் மாநில சங்கங்கள்

# செப்டம்பர் 2 வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்குவோம்

அன்பார்ந்த தோழர்களே, தோழியர்களே,

பத்தாண்டு கால மன்மோகன் சிங்கின் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சி காலத்தில், அவர்கள் புதிய பொருளாதார கொள்கையினை வலுவாக அமுலாக்கியதின் விளைவாக நாடு முழுவதும், ஏழை எளிய, நடுத்தர மக்களின் வாழ்க்கைத்தரம் மிகவும் பாதிக்கப்பட்டது. பத்தாண்டு காலம் பொறுத்தது போதும் என இந்திய நாட்டு மக்கள் பொங்கி எழுந்தார்கள். கொதிக்கும் எண்ணெய் சட்டியிலிருந்து குதித்து எரியும் கொள்ளியில் விழுந்ததை போல மக்கள், காங்கிரஸ் ஆட்சியை தோற்கடித்து, அதற்கு மாற்றாக நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க ஆட்சிக்கு வாக்களித்தனர். ஆனால் தேர்தல் நேரத்தில் ஏழைகளின் கஷ்டங்களை அனைத்தும் உணர்ந்தவன் நான் என்றும், அதனால் அவர்கள் துயரங்களை துடைப்பேன் என்று வாக்குறுதிகளை அள்ளி அள்ளி வழங்கியவர்கள் ஆட்சி பீடம் ஏறிய பின்னர் இந்திய நாட்டின் பெருமுதலாளிகளுக்கும் பன்னாட்டு பகாசூர கம்பெனிகளுக்கும்தான் வெண் சாமரம் வீசுகிறார்கள். ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் சிறு சிறு சலுகைகளை கூட மானிய வெட்டு என்ற பெயரில் ரத்து செய்கின்றனர்.

நரேந்திர மோடி தலைமையிலான பாஜக ஆட்சிக்கு வந்து ஓராண்டு காலமும் ரயில் கட்டண உயர்வு, டீசல், பெட்ரோல் விலை உயர்வு, திட்டக் கமிஷன் கலைப்பு, தொழிலாளர் நலச் சட்டங்களில் முதலாளிகளுக்கு சாதகமான திருத்தங்கள், பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகள் விற்பனை உள்ளிட்ட பல தொழிலாளர் விரோத, மக்கள் விரோத முடிவுகள் எடுக்கப் பட்டுள்ளன. மேலும் பாராளுமன்ற மேலவையில் அனுமதி கிடைக்காது என தெரிந்துக் கொண்டு ஏழை விவாசாயிகளிடம் இருந்து அவர்கள் அனுமதி இல்லாமலேயே அவர்களின் நிலத்தை எடுத்து பெரு முதலாளிகளுக்கு வாரி வழங்க ஏற்பாடு செய்யும் 'நிலம் கையகப்படுத்தும் மசோதா'வை அவசர சட்டம் மூலம் நீட்டித்துக் கொண்டே இருக்கிறது.

பன்னாட்டு கம்பெனிகள் பல சலுகைகளை பெற்று நம் நாட்டில் தொழில் துவங்கினால், கோடிக்கணக்கான வேலை வாய்ப்பு பெருகும் என்று ஆட்சியாளர்கள் வாய் கிழிய கூறினார்கள். அதனால் அவர்களுக்கு பல்வேறு வரிச் சலுகைகளை அரசாங்கம் கொடுத்தபோதும், அவர்கள் திடீரென தங்கள் நிறுவனங்களை மூடி விட்டு, அதில் உள்ள ஆயிரக்கணக்கான தொழிலாளர்களையும், அவர்களின் குடும்பங்களையும் நடுத்தெருவில் விட்டு விட்டு சென்றதை நோக்கியா மற்றும் ஃபாக்ஸ்கான் ஆகியவற்றில் நாம் கண்ட காட்சிகள்.

நமது BSNLலிலும், கடந்த ஆட்சியாளர்களின் தவறான கொள்கைகள் காரணமாகத்தான் BSNL நிறுவனம் நலிவடைந்தது என்று சரியாகவே நமது மத்திய தொலை தொடர்பு அமைச்சர் கூறிய போதும் அவரும் எந்த ஒரு உருப்படியான நடவடிக்கையையும் இது வரை எடுக்கவில்லை. BSNLஐ புத்தாக்கம் செய்வதற்கான நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து BSNLல் பணியாற்றக்கூடிய இரண்டரை லட்சம் ஊழியர்களும், அதிகாரிகளும் அவர்களோடு ஒப்பந்த தொழிலாளர்கள் ஒரு லட்சம் பேரும் ஏப்ரல், 2015ல் இரண்டு நாட்கள் வேலை நிறுத்தம் செய்தபோதும் அதனைப் பற்றி கவலைப்படாதது மட்டுமல்ல, தொழிற்சங்க தலைவர்களை அழைத்து பேச்சு வார்த்தை நடத்தக் கூட மத்திய அமைச்சர் தயாராக இல்லை என்பது அவர்களின் தனியார் ஆதரவு கொள்கைகளை வெளிக்காட்டுகிறது.

எனவே அரசின் தனியார் ஆதரவு, பொதுத்துறை விரோத கொள்கைகளை எதிர்த்து மத்திய தொழிற்சங்கங்களும், துறை வாரி சம்மேளனங்களும் இணைந்து செப்டம்பர் 2, 2015 அன்று நாடு தழுவிய ஒரு நாள் வேலை நிறுத்தத்திற்கு அறை கூவல் விட்டுள்ளன. நாடு முழுவதும் உள்ள அனைத்து தொழிலாளர்களையும் தாக்குகின்ற அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு, நடவடிக்கைகளுக்கு எதிராக இந்திய நாட்டின் ஒன்று பட்ட உழைக்கும் வர்க்கம் இந்த வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விட்டுள்ளது. அரசின் இந்த தாராளமய கொள்கைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள

பொதுத்துறை நிறுவனமான BSNLல் உள்ள அனைத்து தொழிலாளர்களும், அதிகாரிகளும் இந்த வேலை நிறுத்தத்தில் பங்கேற்க வேண்டியது இன்றைய முக்கியமான தேவையாகும்.

BSNL நிறுவனத்தில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களான நாம் இருவரும், இதர சங்கங்களுடனும் பேசி, மாவட்ட மட்டங்களில் அரவணைத்து ஒரு வலுவான ஒன்று பட்ட போராட்டமாக நடத்திட திட்டமிட வேண்டும். மாவட்டங்களில் உள்ள அனைத்து கிளைகள்/தொலைபேசியகங்கள்/அலுவலகங்கள் அனைத்திலும் உள்ள அனைத்து தொழிலாளர்களிடம் பேசி இந்த வேலைநிறுத்தத்தை வெற்றிகரமாக்கிட மாவட்ட சங்கங்கள் உடனடியாக இணைந்து திட்டமிட வேண்டும். அந்தந்த மாவட்டங்களில் உள்ள மாநில சங்க நிர்வாகிகளையும் இணைத்துக் கொண்டு, நமது இரண்டு மாவட்ட சங்கங்களும் இணைந்து உடனடியாக வலுவான பிரச்சாரத்தை மாவட்டம் முழுவதும் கொண்டு செல்ல வேண்டும். மாநில சங்கங்களும் தமிழகத்தின் மிக முக்கியமான மையங்களில் பிரச்சாரக் கூட்டங்களிலும் பங்கேற்கும். அதற்கான சுற்றுப் பயண விவரம் விரைவில் வெளியிடப்படும்.

<u>கோரிக்கைகள்</u>

1) பொது வினியோக முறையை பலப் படுத்துவது மற்றும் உணவுப் பொருட்களின் ஊக வணிகத்தை தடை செய்வதன் மூலம் விலைவாசி உயர்வை கட்டுபடுத்து

2) உறுதியான வேலை வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் வேலையில்லா திண்டாட்டத்தை கட்டுப்படுத்து.

3) தொழிலாளர் நலச் சட்டங்களை விதிவிலக்கு ஏதுமின்றி அமுல்படுத்து. தொழிலாளர் நலச் சட்டங்களை மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடு.

4) அனைத்து தொழிலாளருக்குமான சமூக பாதுகாப்பை உறுதி செய்.

5) குறைந்தபட்ச கூலி ரூ.15,000/- என உறுதிப்படுத்து.

6) எல்லா விதமான தொழிலளர்களுக்கும் குறைந்த பட்ச ஓய்வூதியத்தை 3000 ரூபாய்க்கு குறையாமல் உறுதிப்படுத்து.

7) மத்திய மாநில பொதுத்துறை நிறுவனங்களில் பங்கு விற்பனையை நிறுத்து.

8) தொடர்ச்சியான பணிகளை ஒப்பந்தமயமாக்குவதை நிறுத்தி ஒப்பந்த ஊழியர்களுக்கு நிரந்த ஊழியர்களுக்கு வழங்கும் அதே ஊதியத்தை வழங்கு.

9) போனஸ் மற்றும் வைப்பு நிதிகளுக்கான எல்லாவிதமான வரையறைகளையும் நீக்கு. பணிக்கொடை தொகையை உயர்த்து.

10) விண்ணப்பித்த 45 நாட்களுக்குள் தொழிற்சங்கங்களை அட்டவணைப்படுத்து. C87 C98 ILO தீர்மானங்களை உடனடியாக அமுல்படுத்து.

11) தொழிலாளர் நலச்சட்டங்களை திருத்துவதை கைவிடு.

12) ரயில்வே, காப்பீடு மற்றும் பாதுகாப்பு துறையில் அந்நிய நேரடி முதலீடு அனுமதிக்கப்பட்டதை திரும்ப பெறு.

13) BSNLன் புத்தாக்கத்திற்காக FORUM கொடுத்துள்ள கோரிக்கைகளை உடனடியாக ஏற்றுக்கொள்.

மத்திய அரசு மக்கள் நல அரசாக இருக்க வேண்டும். ஏழை எளிய, நடுத்தர மக்களுக்கு எதிரான கொள்கைகளை கடைபிடிக்கும் மத்திய அரசுக்கு பாடம் புகட்டும் வகையில், **வலுவான செப்டம்பர் 2 வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக நடத்திக் காட்டுவோம்**. அரசின் கொள்கைகளை பின்னுக்கு தள்ளுவோம். மக்கள் நலனை காத்திடுவோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர் BSNLEU**

**(R.பட்டாபிராமன்)**
**மாநில செயலாளர் NFTE BSNL**